
# எதிர் வீட்டு நாயும் என் ஏழை நாயும்



யோ. புரட்சி

# எதிர்வீட்டு நாயும் – என்
# ஏழை நாயும்

யோ. புரட்சி

இலண்டன், மற்றும் இலங்கை
தமிழ் இலக்கிய நிறுவகம்.

தலைப்பு : "எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும்"

வகை : கவிதை

படைப்பாளர் : யோ. புரட்சி

உரிமை : படைப்பாளருக்கு

பதிப்பு : 2014, மாசி

பக்கங்கள் : x + 54

வெளியீடு : இலண்டன், மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம்,
9-2/1, நெல்சன் இடம், கொழும்பு - 06. 011 - 4902406

அச்சிட்டோர் : கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல. 681, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

விலை : 200 /-

Title : "Ethirveeddu Naayum En Eaalai Naayum"

Subject : Poem

Author : Yo. Puratchi

Copy Right : Yo. Puratchi

Edition : 2014, February

Page : x + 54

Published : London and Sri Lanka Tamil
Literary Association. 011 - 4902406

Printed by : Harikanan Printers,
No.681, K.K.S. Road, Jaffna.

Price : 200 /-

ISBN : 978-955-41105-0-2

## அம்மாவின் ஆசியுடன்...



01-01-2014
வள்ளுவர்புரம்

அன்பு மகனே
கண்ணா (பரணி)
எதிர் வீட்டு ஆயுதம் என் ஆனை
நாயும் கவிதை நூல் வெற்றிபெற
அம்மா. வாழ்த்து மொழிகளை
பரவ விடுகின்றேன்

உன்ற அம்மா
யோ. செல்வகுந்தி

**கவியரசர் கண்ணதாசன் அவர்களின் புதல்வனும் கண்ணதாசன் பதிப்பக நிறுவனருமாகிய காந்தி கண்ணதாசன் அவர்களின் இதயத்திலிருந்து .....**



அன்புச் சகோதரர் யோ. புரட்சியின்
கவிதை நூல் 'எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும்'
எனக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப் பெற்றது.

அருமையான - உணர்வு பூர்வமான -
- புதுக் கவிதைகள்!

என்னுடைய தந்தை கவியரசர் கண்ணதாசனின்
கவிதைகள் எல்லாம் மரபுக் கவிதைகளே!
ஆனால் புதுக்கவிதைக்கு அவர் ஆதரவு
என்றும் உண்டு!

உணர்வுகளை வெளிப்படுத்த, ஒருவனது வலியை
மற்றொருவனுக்குப் பாடமாகவும், பாவமாகவும்
மாற்ற எழுத்துக்களால் தான் முடியும்.

வலியை யோ. புரட்சியின் வரிகளில்
உணர்கிறேன்! மனவலிமையையும்
பாராட்டுகிறேன்! சிறையில் கவிதையில்
வாழ்ந்திருக்கிறார். இந்த அன்புச் சகோதரருக்குச்
சிறந்த எதிர்காலம் உண்டு!


எனது தந்தை கவியரசர் எழுதியது போல,
"வாழுகின்ற மக்களுக்கு
வாழ்ந்தவர்கள் பாடமடி" -

கவிதை வரிகள் - இனி எதிர்கால நம்பிக்கைகளைச்
சொல்லட்டும். வலிகள் நம்முடனே இருக்கட்டும்.
வரும் சிந்தனைக்கு வெளிச்சமாவோம்! யோ. புரட்சி
எதிர்கால வழிகாட்டியாக மாறி இன்னும் நிறைய
எழுத வேண்டும்! "அனுபவத்தை விடச் சிறந்த
பல்கலைக்கழகம் எதுவுமில்லை" - கவியரசர்.
வாழ்க தமிழ்! வாழிய தமிழ்க் கவிஞர்கள்! அன்புடன்

காந்தி கண்ணதாசன்

தமிழ்நாடு, இந்தியா.

# உதயணன் அவர்களின் உள்ளத்திலிருந்து....



உள்ளத்துக் கிடக்கைகளை, உழலும் நெஞ்சத்துடன் சொல்லிவிட வேண்டும் என்ற ஆதங்கம். மனப் பாரங்களை இறக்கிவைக்க எண்ணிய யோ. புரட்சி என்ற கவிஞர் சமுதாயத்தின் கண் தாம் தரிசித்த தரிசனங்களைக் கவிதை வடிவில் தந்துள்ளார்.

பாரதிக்குப்பின் வசன கவிதைகளின் செல்வாக்கு தமிழ் இலக்கியப் பரப்பில் வீறுநடைபோடத் தொடங்கியது. இதன் தோற்றம்தான் பின்பு தோன்றிய வசனகவிதை, புதுக்கவிதை எனும் புதுமைத் தமிழ் கவிதைகளுக்கு வித்திட்டது. பாரதிக்குப்பின் பாரதிதாசன் காலத்திலும் இத்தகைய கவிதை ஆக்கங்கள் தோற்றம் பெற்று பாமரமக்களைச் சென்றடைந்தன. தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதைகளின் வரவு ஒரு புரட்சிகரமான மாற் றத்தை உருவாக்கியது.

அந்தப் புரட்சிகரமான மாற்றங்களின் தொடர்ச்சியாக வழிவந்த ஒரு கவிஞராக யோ. புரட்சி எம்முன் நிற்கின்றார். அவரது 'எதிர்வீட்டு நாயும் என் ஏழைநாயும்' என்னும் இக் கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகள் உயிர்துடிப்பு மிக்க சொல்லாடல்களாகக் கவித்துவம் பெற்றுள்ளன. இந் நூலிலுள்ள சில கவிதைகள் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந் துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது. இளமைத் துடிப்புமிக்க இளைஞரின் கவிதைகள் சிலருக்குப் புரியாப் புதிர்களாக இருந்தாலும் அவை அவரின் ஆத்மாவின் இராகங்களாகவே மீட்டுகின்றன. இந்த நூலிலுள்ள கவிதை ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வரலாற்று நினைவுகளை மீட்டுப்பார்க்க உதவியுள் ளமை பாராட்டுக்குரியது. யோ. புரட்சி தொடர்ந்தும் கவிதைகளைப் படைத்துப் புதுக் கவிதைத் துறைக்கு மேலான பங்களிப்பை வழங்க வேண்டும் என வாழ்த்துரைக்கின்றேன்.

2 Blue Cedars, Warren Road,
Banstead, Surrey SM7 1NT,
UK

வவுனியூர் இரா உதயணன்,
தலைவர், இலண்டன் மற்றும் இலங்கை,
தமிழ் இலக்கிய நிறுவகம்.

# பதிப்பாளரின்

# பகிர்வு மொழிகளிலிருந்து....


'எழுதுவது ஒரு தவம்' என்று சொல்லுவார்கள். எல்லோராலும் எல்லாவற்றையும் எழுதிவிட முடியாது. ஒரு படைப்பாளி சமுதாயத்தின் கண் தான் பெற்ற அனுபவங்களை முன்னிலைப்படுத்தித் தமது ஆக்கங்களை வெளிக்கொணருகின்றான். அவை மக்களைச் சென்றடைய வேண்டும். மக்கள் மனங்களில் ஏதோ ஒரு விதத்தில் தாக்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறான். இத்தகைய சிந்தனைகள் எழுத்தாளர்கள் உள்ளத்தில் தோன்றினாலும் எல்லா எழுத்தாளர்களின் படைப்புகளும் சமுதாயத்தால் பேசப்படுவதில்லை.

ஒரு படைப்புக்கு உருவமும் உள்ளடக்கமும் அவசியம். உள்ளடக்கம் இல்லாத ஆக்கம் வெறும் ஜடம். அதில் உயிர்த் துடிப்பு இல்லை. உருவம் இல்லாத படைப்பு இது வெறும் கருத்துமாத்திரம்தான். உருவத்திலும் உள்ளடக்கத்திலும் இணையும் சங்கமத்தில்தான் உண்மையான உயிர்த்துடிப் புள்ள படைப்புகளை உருவாக்கமுடியும். தாம் வாழ்ந்த காலத்தில் நிலவிய அரசியல், சமூக நிலைமைகள் ஏற்படுத்திய பாதிப்புக்களை முன்னிலைப்படு த்தி, புதியதோர் உலகம் காணமுற்பட்டுள்ளார் யோ. புரட்சி என்ற கவிஞர்

'எதிர்வீட்டு நாயும் - என் ஏழைநாயும்' என்னும் அவரின் கவிதைத் தொகுதியின் தலைப்பு சமுதாய ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டி நிற்கின்றது. இக் கவிதைத்தொகுதியில் உள்ள கவிதைகள் ஏதோ ஒரு விதத்தில் எழுத்தாளரின் அனுபவப் பிம்பங்களாகவே காட்சிதருகின்றன. எல்லாச் சந்தர்ப்பங்களின் கவிஞரின் உள்ளக்குமுறல்கள் கவிதைவடிவில் உருவாகி அர்த்தப்பாடுகளை வெளிக்காட்டி நிற்கின்றன. ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வரலாற்றுத் தடங் களை முன்னிலைப்படுத்தி எழுந்தவையாகவே அமைந்திருக்கின்றன. மேலும் சிறுசிறு உதாரணங்கள் முலம் தாம் சொல்லவந்த விடயங்களை வெளிப் படுத்தும் திறன் அவரது கவிதைகளுக்கு உண்டு. துடிப்புள்ள இளைஞராகத் தம்மை முன்நிலைப்படுத்திக்கொண்டு கவித்துவம் மிக்க ஒரு கவிஞராக முகிழ்ந்து நிற்கும் யோ. புரட்சியின் இக் கவிதைத் தொகுதிக்குப் பதிப்புரை வழங்குவதில் மகிழ்ச்சி காண்கின்றேன்.

அன்புடன்,
தம்பு சிவா.

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம்,
9–2/1, நெல்சன் இடம்,
கொழும்பு – 06.



# சிலர்க்கு புரியா புதிர்களே...

நான் பெற்ற
பேறுகளே....
நலியா நல்
வேருகளே....
மழை தூவும் மேகங்களே....
மனம் தேற்றும் இராகங்களே...
பசியாற்றும் கதிர்களே...
சிலர்க்கு புரியா
புதிர்களே....
உங்களை புத்தகமாய்
ஒன்றாக ஆக்கினேன்.
உளத்துள் ஒழிந்திருந்த
துயரதை போக்கினேன்.

வாழ்த்துக்களுடனும்
அன்புடனும்
**யோ. புரட்சி**
*02.01.2014.*

வள்ளுவர்புரம், விசுவமடு,
முல்லைத்தீவு, இலங்கை.
*077 589 2351 / 077 464 1921*
puratchi2100@gmail.com
முகநூல் (Facebook) yo puratchi (யோ. புரட்சி)

## இந்தப் புத்தகப்பூ இவருக்கு...

சிலகாலம் வாழ்ந்தாலும்
சிலைபதிந்த எழுத்தாக என்னுலிருக்கும்
இறந்தாலும் இறக்காத

செல்லத்தங்கை 'அஜந்தா' விற்கு...

# விளைந்திருக்கும் மணிகள்.....


01. அவைக்கு அப்படி 1

02. ஒரு சாரம் ஓடுகிறது 2

03. ஆடொன்றின் அறியாமை 4

04. எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும் 5

05. இறந்தநாள் வாழ்த்துக்கள் 6

06. காணாமல் போய்விட்ட கண்ணான தங்கைக்காய் 7

07. எருமை 9

08. கழுதை 9

09. ஞமலி (நாய்) 9

10. குரங்கு 9

11. வெளிநாட்டு மாப்பிள்ளை 10

12. செஞ்சோற்றுக் கடன் 11

13. உதாரண தம்பதிகள் 13

14. சாமியாரிடம் கேட்காத கேள்வி 14

15. இருந்தும் இல்லாமல்.... 15

16. இரண்டாம் உயிர் தந்தவர்கள் 16

17. சிலையொன்று பேசுகிறது 17

18. மோசடிப் பேர்வழிகள் 18

19. அற்புத அனுபவங்கள் 19

20. விளம்பர நடிகை 20

21. அவள் செத்துவிட்டாள் 21

22. முட்டை 22

23. முதலிரவு 22

24. ஹைக்கூ தடாகம் 23

25. ஒரு லயன் அழுகிறது 24

26. இறைச்சிக் கோழியின் கடைசி நிமிடம் 26

27. ஏழையெந்தன் கைகள் 27

28. விஞ்ஞானிகளும் அகதிகளும் 28

29. ஆண்விபச்சாரன் 30

30. நீர் ஆண்டவரின் பிள்ளையல்ல 31

31. காதல் தேர்தல் 32

32. தங்கமான புருசன் 34

33. பிச்சைக்காரன் தரும் பிச்சை 35

34. விபச்சாரியின் கல்லறை வாசகம் 35

35. உணர்ச்சி 36

36. தாய்க்கொரு தாலாட்டு 37

37. ஆண்டவனின் அவதாரம் 39

38. கிடைக்காதது 40

39. சாதி ஒழிப்பு 40

40. புரட்சிப்பெண் 41

41. யோகேஸ்வரி 42

42. பாலியல் வன்புணர்ச்சி 43

43. கொடுத்தால் மட்டும் 44

44. பாம்பு பரவாயில்லை 45

45. இளவரசர் வில்லியம்சும் இவனும் 46

46. அநாதையின் ஆத்மா 47

47. சுற்றாடல் கீதம் 48

48. செவ்வாய்க் கிரகம் சினக்கிறது 49

49. இதுதான் மாடி வீடு 50

50. மனைவியர் சிலர்க்கு மட்டும் 51

# அவைக்கு அப்படி

சிலையிருக்கும் இடம்
பூசகர் பார்வைக்கு
கருவறை.
பல்லிகள் கூட்டத்திற்கு
அது துயிலறை.

நீ சொல்கிறாய்
நீருள்ள கிணறு என்று.
புரிந்து கொள்
தவளைகளுக்கு
மலசலகூடமும் அதுதான்.

முத்துப் பற்களென
கத்தித் திரியாதே
எத்தனை பூச்சிகளுக்கு
இருப்பிடம் அது.

கார்குழல் என
கவிதை எழுதுகிறாய்.
கறுப்புப் பேன்களோ.... தம்
உத்தியோகபூர்வ இல்லமென
உரைக்கின்றனவே.

நீயோ
உன் வயிறு என்கிறாய்.
உன்னிடம் கேட்காமலே
ஓராயிரம் கிருமிகள் அங்கு
குடும்பம் நடத்துகின்றன.

மனிதா .... மனிதா...
தயிரும் கள்ளும்
பற்றீரியாக்கள் சுவைத்து
பதப்படுத்தி தருபவை
அவையுண்ட மீதிகளே அவை.

எமக்குத்தான் இப்படி.
அவைக்கோ அப்படி. ◆

சூரியன் F.M, 03-01-2012.
மித்திரன், 09-06-2013.

காலை 05:40,
10-04-2011,
புதிய சேனபுர, பொலனறுவை.

# ஒரு சாரம் ஓடுகிறது

இடக்காலில் எறிகணைபட்டு - வலைஞர்
மடத்து வைத்தியசாலையிலே
மயங்கி நான் கிடந்தபோது
மாட்டியிருந்த ஜீன்சை மாற்றி
மருத்துவர் கட்டிவிட்ட சாரம்.

இடையிடையே என்குருதி
படிந்துவிட்ட பின்னாலும்
என்கூட மருத்துவமனையில்
நின்றிருந்த சாரம்.

வைத்தியசாலை
வாழ்க்கை முடித்து
ஓய்வுகால வாழ்க்கையிலே
ஒன்றாக என்னோடு
உறங்கிய சாரம்.

போர்வையாகவும்.....
அப்பப்போ பாயாகவும்
துடைத்திடும் துவாயாகவும்
துணைநின்ற சாரம்.

தான் காயம் பட்டபோதும்
நான் வேணுமென
கூடவிருந்த சாரம்.

நந்திக்கடல் நீர்கடந்து
நகர்ந்தே வருகையிலும்
எந்தனின் இடுப்பைச்சுற்றி
குந்தியிருந்த சாரம்.

புனர்வாழ்வு நிலையம் சில
புதுப்புது சிறைகள் பல
கண்டுவிட்ட சாரம்
துண்டுபடா சாரம்.

தோய்க்கப்பட்ட நிலையில்
தூய்மையாய் இருந்த சாரம்.
துணையொருவர் தானின்றி
அழுதென்னிடம் வந்தவரின்
ஆடை குறை தீர்க்க
ஓடிவிட்ட சாரம்.
அற்புத சாரம் நினைத்து
விழியெல்லாம் ஈரம். ◆

* இந்த சாரம் இப்போதும் என்னிடம் உள்ளது.

தினக்குரல்,
23-01-2011.


பகல் 12:38,
29-11-2010,
பூசா சிறை, காலி.

---

விடிவுக்கான எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் மாறாத முகத்துடன் எளிமையான கவித்துளிகள், யோ. புரட்சி படைப்பவை.

சீமான் செல்வா
ஆபிரிக்கா

## ஆடொன்றின் அறியாமை



திருநீறு பூசப்பட்டு....
சந்தனம் இடப்பட்டு....
குங்குமம் தடவப்பட்டு....
கழுத்தினிலே
கண்ணுக்கினியதோர்
மாலையிடப்பட்டு....
இழுத்துச் செல்லப்படும்
கறுத்த ஆடு
கனவு காண்கிறது
மாட்டுப் பொங்கல் போலவே
ஆட்டுப் பொங்கலும் உண்டென்று.
அதன் மனசு
அறியவே அறியாது
பாரம்பரிய பூஜையொன்றில்
பலியிடப்படப் போகிறோம் என்று ♦

மாலை 03:50,
09-09-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

சூரியன் FM,
2012.

---

வெறும் வரிகள் அல்ல நிஜங்களால் நிறைந்த பெரும் வரிகள்.

வைஷ்ணவி சாருகா
யாழ்ப்பாணம்.

# எதிர்வீட்டு நாயும் - என்
# ஏழை நாயும்

பக்கத்து வீட்டு
பணக்கார நாயிற்குபோல்
எந்தநாளும் உனக்கு
இறைச்சி இடமாட்டேன்.
மிஞ்சுகிற கஞ்சியை
தலைதடவி இட்டு
தலைவா உன்பசி தீர்ப்பேன்.

அந்த நாயிற்குபோல்
அழகான கூடுசெய்ய
இவனிடம் வசதியில்லை.
பழைய சாக்கு விரிப்பேன்
பத்திரமாய் படுத்துக்கொள்.

காலையும் மாலையும்
பால்தேநீர் உனக்கிட
பணமில்லை எனக்கு
பழஞ்சோறு இருந்தால்
படைப்பேனே உனக்கு.

மாதமொரு தடவை
மருத்துவரிடமும் கூட்டிச் செல்லேன்.

எழிலாய் ஓர்
உடை மாட்டி
ஏசிகாரிலே உனை
ஏற்றிச் செல்லேன்.

வயல் வேலைக்கு
நடக்கும் போதும்...
வாய்க்கால் குளிப்புக்கு
போகும் போதும்...
தவறாமல் அழைத்துச் செல்வேன்.

ஆனால்.... ஒன்று
அந்த நாயைப் போல
அடைத்து வையேன் உன்னை.
சுற்றித்திரிய ஒரு
சுதந்திர அனுமதி தந்தேன்.

◆

தமிழ் F.M, 18-09-2013.
மித்திரன், 25-10-2009.

காலை 8.30,
25-06-2009,
வ/முஸ்லிம் ம. வி.

---

புரட்சி ‘மற்றவர் மனதில் வைத்திருக்க வேண்டியதை அவன் தன் பெயராய் வைத்திருக்கிறான்’ கவிதைகளிலும் கூட.

திரு. கஜேந்திரா
முகாமையாளர்,
வலம்புரி பத்திரிகை.

# இறந்தநாள் வாழ்த்துக்கள்

இன்று....
இனிய நாள்.
இத்தனை நாள் துன்பமிருந்து
இனிய விடுதலை
கிடைத்த நாள்.
எனக்குச் சுதந்திரநாள்.

வாழ்க்கை எனக்கிட்ட
வேலியைத் தாண்டி - நான்
குதித்த நாள்.
வாழ்க்கை நூலின்
கடைசிப் பக்கம்
படித்து முடித்த நாள்.

இனி .... ஏக்கமில்லை.
எனை வாட்டும்
வறுமை இல்லை.
தலை வெடிக்கும்
சர்ச்சைகள் இல்லை.
கண்ணீர் பொழிந்திடும்
சந்தர்ப்பம் இல்லை.

வீடில்லை என
விளம்ப மாட்டேன்.
ஊரூராய்த் திரிந்தும்
உணவு கிடைக்கவில்லையென
உளம்நோக மாட்டேன்.
சுடுதண்ணீர் ஊற்றி
தொந்தரவு செய்வோரை
சந்திக்க மாட்டேன்.
அம்மா...பிச்சை என்றே
அலைய மாட்டேன்
ஆலய மண்டபத்திலும்....
அப்பப்போ சத்திரத்திலும்....
படுக்கை இடமாட்டேன்.

எல்லாம் மாறிற்று
இறப்பு வந்ததால்.


எவருமே சொல்லாததால்
என் ஆத்மா
எனக்கு சொல்லிக்கொள்கிறது
இனிய
இறந்த நாள் வாழ்த்துக்கள். ◆

இன்று தைப்பொங்கல் நாள். இந்நாளில் காலி பூசா சிறைச்சாலையில் வைத்து பதினெட்டுக் கவிகள் படைத்தேன்.

தினக்குரல், 06-03-2011.
சூரியன் Fm, 11-03-2011.

மாலை 04:00,
15-01-2011.
பூசா, காலி.

## காணாமல் போய்விட்ட
## கண்ணான தங்கைக்காய்.......



'அ' பழக்குவதற்காய்
அன்போடு நான் பிடித்த
விரல்கள்தானா இது.

தந்தையில்லா தாயில்லா
தங்கை உந்தனுக்கு
தாயாக நானிருந்து
தவறாமல் வாரிவிடும்
தலைமயிரா இது.

வடிவு வடிவாய் நான்
வாங்கித்தந்த ஆடைகளை
எடுப்போடு அணிந்து
என் கண்முன் நிற்கும்
எழிலான தேகம்தானா இது.

உன்னைவிட்டு எங்கேயும்
ஓடிவிட மாட்டாள்
சின்னத் தங்கையென
செல்லமாய்
எப்போதுமுரைக்கும்
சிங்கார வாய்தானா இது.
சின்னக் கோபம் கொண்டு
செல்லமாய் நான் ஏசினாலும்
என்னைப் பார்த்து
ஏளனமாய் சிரிக்கும்
இதழ்கள்தானா இது.

ஒரு வயிற்றில் உதித்த
உயிர்த் தங்கையே!
ஓலமிடும் அண்ணாவின்
உயிரின் குரல்
உந்தனுக்கு கேட்குதாம்மா.

செந்தாமரையாய்ச் சிரித்திருந்த
சிவந்த வதனம்தானா இது.

குமரியான பின்கூட
கொலுசு மாட்டிவிட்ட
கால்கள்தானா இது.

மதிப்புள்ள மாப்பிள்ளையுனக்கு
மணம்முடித்து தந்துவிட்டு
மணம் முடிப்பேன் நானென
தினமுரைத்தது தெரியுமா செல்லமே.

அன்று ஒருநாள் நீ
அண்ணாவை விட்டு
எங்கோ போனாயம்மா.
இத்தனை நாளான
என் தேடல்களுக்கு
இன்றொரு விடை
இவனுக்கு கிடைத்ததம்மா.

மணமேடையிலே...
மணமகளாய் உன்னை
கண்டுவிட நினைத்தேன் - இன்று
மலக்குழி தன்னில்
பொலித்தீன் சுற்றப்பட்ட
புழுக்கள் நிறைந்த உடலாய்
புன்னகை அழகியுனை
கண்ணால் கண்டு செத்தேன். ◆

சூரியன் FM ரீங்காரத்தில் இக்கவிதை உலா வந்தபோது 'தங்கநிலவே உன்னை உருக்கி தங்கச்சிக்கு தங்க நகை செய்திடவோ' பாடலை T.S. முகுந்தன் ஒலிபரப்பினார். நான் அழுதுவிட்டேன்.

காலை 8:22,
01-06-2010,
வ/தொழினுட்பக்கல்லூரி.


சூரியன் Fm,
23-06-2010.
வீரகேசரி - 08-08-2010

---

வித்தியாசமான முறைகளைத் தழுவி தன்க்கென
தனிப் பாதையில் ஓடும் யோ. புரட்சி கவிநதிகள்.

மௌனஞானி பார்த்தீபன் (யாழ்ப்பாணம்)
மலேசியா.

## எருமை




மழைவெயில் பாராது
மனம் வைத்து உழைக்கும்
மானிடனைப் பார்த்து
எஜமானன் ஏசினான்
எருமை என்று.
விசுவாசமாய் உழைப்பதையே
விளக்குகிறான் எஜமானனென
விளக்கம் கொண்டான்
ஏழை உழைப்பாளி. ◆

## கழுதை



நீயும் சுமக்கிறாய்
நானும் சுமக்கிறேன்
நீ சுமப்பது
வெறும் பாரத்தை.
நான் சுமப்பதோ
மன பாரத்தை.
என் சுமையிலும்
உன் சுமை
குறைவென்பதால்
கொடுத்து வைத்தது நீதானே. ◆

## (ஞமலி) நாய்



மானிடன் மட்டும்தான்
சிரிக்கிறான் என்பது
மதியிலார் கருத்து.
நம்மைச் சுற்றி
நாய் வாலாட்டுகிறதே.
அதன்
அழகுநிறை சிரிப்பு அது.
ஒன்று மானிடா
உன்னைப் போல
வஞ்சகச் சிரிப்பு
அதற்குத் தெரியாது
அதுவுனக்குப் புரியாது. ◆

## குரங்கு



ஒரு தடவை
ஊருக்கு வா குரங்கே.
உனக்கே வெட்கமாயிருக்கும்.
ஏன் தெரியுமா?
நீ...
கிளைவிட்டு
கிளைமட்டுமே தாவுகிறாய்.
எம்மவர்கள்....
எத்தனை ரகங்களாய்....
எத்தனை விதங்களாய்...
எப்படியெல்லாம் தாவுகிறார்கள்.
போ...
நீ தோற்றுவிட்டாய். ◆

சூரியன் Fm,
26-01-2012.

இரவு 10:00,
26-01-2012.
புதியசேனபுர,
பொலனறுவை.

## வெளிநாட்டு மாப்பிள்ளை

அப்பா.......
படித்தவனா என
பரிசோதித்தீர்கள்.
பட்டம் பெற்றவனா என
பார்த்துக்கொண்டீர்கள்.
கம்பியூட்டர் தேர்ச்சியும்
காரும் உண்டாவென
உறுதி செய்தீர்கள்.

சாதியின் வகையை
சரியாய் கணித்தீர்கள்
தெரிந்து கொண்டீர்கள்
வெளிநாட்டு பிரஜாவுரிமை
தெளிவாய் உள்ளதாவென.

இத்தனையும் போதுமாகியது
என்னை ஒப்படைப்பதற்கு.
கடுகதியாய் என்னை
கையளிப்பு செய்து
கடத்திவிட்டீர் வெளிநாடு.

தேவையில்லா எல்லாம்
தெரிந்து கொண்ட நீங்கள்
தெரிந்துகொள்ள மறந்தீர்கள்
திருமணமானவன் அவனென்பதை.
மாப்பிள்ளை வசமிருக்கும்
மனைவியர் தொகையை
கணக்கெடுக்க
நினைக்காததேன் அப்பா...

ஆபிரிக்க பாலைவனத்திலே
அருமைமகள் கிடந்தாலும்
வெளிநாட்டில் உள்ளாளென
விளம்பினால் போதும் உங்களுக்கு

இங்கே பாருங்கள்
என்றோ வந்தவள்
இந்த வீட்டு எஜமானியாய்....
இரண்டாவதாய் வந்த நான்
இருக்கிறேன் வேலைக்காரியாய். ◆

சூரியன் F.M,
15-02-2013.

மாலை 05:30,
21-06-2010,
வ/தொழினுட்பக்கல்லூரி.

---

முடங்கிக் கிடக்கும் ஏழ்மைக்கு வெளிச்சம் கொடுக்கும்
புரட்சியின் கவி.

சுகன்யா நடராசா
பரிஸ், பிரான்ஸ்

## செஞ்சோற்றுக் கடன்

யாருமருகில் இல்லாவேளை
கால்தன்னில் எறிகணையால்
நான் காயமுற்றவேளை
தன்னாடை தன்னில்
சிறுதுண்டு கிழித்து
என் குருதி தடுத்த
எனக்குத் தெரியா
ஏழைப்பெண்ணின்
கடன் தீர்ப்பதெப்போ..?

தாய் தன்னை இழந்த
தளிர்தன்னைக் கண்டு
யார்பிள்ளை என்ற
கேள்வியதை கேளாது
தன்முலை தனையூட்டி
வன்பசி தீர்த்த
நல்மன பெண்ணின்
கடனது தீர்வதெப்போ..?

பசிமயக்கம் கொண்டும்
படுக்கவொரு இடமற்றும்
பரிதவித்த போதிலே
பதுங்கு குழியில் இடம்தந்து
பாசமொடு கஞ்சிதந்து
நேசமாய் அணைத்த
நெஞ்சங்களின் கடனை
தீர்ப்பதெப்போ..?

உங்களுடைய கவிதைகள் படித்தவர் மனங்களில் மட்டுமல்ல பாமர மக்களின் மனங்களிலும் பசுமரத்தாணி போல கருத்தூன்றி விடுகின்றது.

சிவானந்தம் வித்தியா
3ஆம் வருடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

தேகங்கள் தன்னில்
சேகரித்த குருதிகளை
பாரங்கள் சுமந்து
பாடுபட்ட மக்களுக்கு
தானங்களாய் கொடுத்த
வானத்திலும் பெரியவுளம்
தானதை படைத்தோரின்
கடன்கள் தீர்வதெப்போ..?

அனைத்துறவும் இழந்து
அன்றொரு நாள்
அந்தரித்த வேளை
அருகேயோர் உறவாகி
அன்பெனக்கு அளித்த
அந்த ஜிம்மி நாயின்
அன்புக் கடனை
அடைப்பது எப்போ....?

எத்தனை கடன்கள்
இவைகள்.
செஞ்சோற்றுக் கடனிலும்
சிறந்த கடன்கள்
யாரென்ற....
எவரென்ற
கேள்விகள் கேளாது
கிடைத்திட்ட கடன்கள்.
அப்போதும்...
இப்போதும்...
எப்போதும்...
தீர்க்க முடியாத
நேர்த்திக் கடன்கள். ◆

சூரியன் F.M,
29-11-2011.

காலை 04:00,
29-11-2011.
புதிய சேனபுர, பொலனறுவை.

---

வித்தியாசமான தலைப்பு. விரிந்த சிந்தனை. நூல் தலைப்பிலும் கூட.....

ஆரையூர்த் தாமரை,
மட்டக்களப்பு.

## உதாரண தம்பதிகள்



ஒன்றாக இருக்கின்றோம்
ஒரே வீட்டில்.
நீ தந்த தாலி
என் கழுத்தில்.
உலகிற்கு நாங்கள்
உதாரண தம்பதிகள்.
எமக்கு மட்டுமே தெரியும்
எண்ணெய்யாக நீ .
தண்ணீராக நான். ◆

சூரியன் Fm,
2012.
மித்திரன்,
23-05-2010.

காலை 06:50,
30-10-2009,
வ/முஸ்லிம் ம. வி.

---

பொய் சொல்லவில்லை
என் தம்பி
'புரட்சி கவிஞன்' - இதை அவன்
புனைவுகள் நிரூபிக்கும்.

கவிமணி நீலாபாலன்
வெலிமடை, பதுளை.

## சாமியாரிடம் கேட்காத கேள்வி

தாடிவைத்த சாமியார்
தேடிப்போகும் கூட்டம்
ஆயிரம்.
சொன்னது பலிக்குமாம்.
எண்ணியது நடக்குமாம்.

மாலைப்பொழுதொன்றில்
மகானைச் சந்தித்தேன்.
தட்சனை வைத்தே
தாள் பணிந்தேன்.
வெளிநாட்டுப்பயணம்
கனிந்தாகி வருமா.?
பணிவோடு வினாவினேன்.
அருட்பார்வை பார்த்தார்
திருவருட் சாமியார்.
இரண்டாவது மாதம்
இங்கிருக்க மாட்டாய்.
இரைகடல் கடந்து
அடைவாய் வெளிநாடு.

நல்லபதில் வந்ததால்
அள்ளிக்கொடுத்தேன்
இன்னும்பணம்.
வெல்லும் காரியம் என
துள்ளியது என்மனம்.

ஓடியது இருமாதம்
ஓடவில்லை என் பயணம்
போகவில்லை வெளிநாடு
புதைந்திருந்தேன் இந்நாடு.

மறுபடியும் சாமியாரை
மண்டியிட்டேன்.
காரணம் அறிய
காணிக்கை இட்டேன்.

கோள்களின் மாற்றம் -உனக்கு
தோள் தரவில்லை
அதனால்தான் பயணம்
கைகூடவில்லை
நம்பிடு என்னை
என்றசைத்தார் நாவை.

திரும்புகிறேன் வீடு.
சாமியாரிடம் கேட்கநினைத்தும்
சாந்தமாக வைத்திருந்த
அந்தக் கேள்வி
அகத்திலேயே கிடக்கிறது.
சர்வமும் அறிந்த
சாமியாரே....
கோள் மாற்றம் எனக்கு
தோள்தாராதென்று
இருமாதம் முன்பு
ஏனுமக்கு தெரியாது..? ◆

இந்நாளில் காலி பூசா சிறைச்சாலையில் பதினாறு கவிதைகள் படைத்தேன்.

வீரகேசரி, 01-05-2011.
சூரியன் FM, 2012

மாலை 05:00,
30-11-2010,
பூசா சிறை, காலி.

## இருந்தும் இல்லாமல்....

அழகழகான சேலையிருக்கு.
ஐந்து பவுணிலே
செய்த தாலியிருக்கு.
வீட்டு பூமரங்கள்
விதவித பூக்களை
பிரசவித்து இருக்கு.
வெளிநாட்டில்
வேலைசெய்த காலத்தில்
அங்கிருந்து அவள் கணவன்
அனுப்பிவைத்த
குங்குமம் இருக்கு.
இவை
எவையையும் அணியவிடாமல்
தடை போடுது சமூகம்
அவள்
விதவையாகி விட்டதால். ◆

அதிகாலை 05:48,
31–10–2010,
பூசா சிறை, காலி.

தினக்குரல்,
06-03-2011.

---

மனக்கிடங்கின் ஆழத்திலிருந்தெழும் யோ. புரட்சியின் கவிதைகள் அனுபவ வெளியின் ஆத்மாவாய் இயங்குகின்றன.

கவிஞர் பொலிகையூர் சு. க. சிந்துதாசன்
வல்வெட்டித்துறை.

# இரண்டாம் உயிர் தந்தவர்கள்

கதிரவன் கண்ணயரும்
கனிந்த மாலைப் பொழுது.
கற்பனைகள் பலவெண்ணி
தனித்திருந்தது இந்த விழுது.
வேகமாய் வீழ்ந்ததே
ஓர் எறிகணை.
விரைந்தே தாக்கியதே
என் இட காலதனை.
நிமிர்ந்து நின்றிட
நெஞ்சத்தில் துணிவிருந்தும்
விழுந்து விட வைத்ததே
தொடர்ந்து பெருகிய இரத்தம்.

குருதி நிலத்தில்
வழிந்தோட....
உடலில் இருந்த
என்னுயிர் ஆட....
மருந்திடுவார் யாருமின்றி
மனமது வாட
கட்டுத்துணி ஒன்றினை
கண்கள் தேட....

பட்ட காலிலே
படுமெனும் பழமொழி
எனக்கே எழுதியதாய்
வெட்டவெளியூடு விரைந்து
வந்த
தோட்டா ஒன்றும்
தொட்டதென் காலினை

இரண்டு காயமும்
இடைவிடா போட்டி
நீயா... நானா...
நிறைய குருதி சுரப்பது.?
காப்பாற்றப்படுவேனா..?
இல்லை
காலனிடம் செல்வேனா?
எனக்குள் அவசர பட்டிமன்றம்.
கண்களின் பார்வை
கரைகிறது மெதுவாய்.
உயிர் எப்படி போகுமோ - நான்
பரீட்சிக்கத் தயாராய்.....

உறவொன்று வந்து
கரம் தந்தது.
பதினாறு வயது
தங்கையர் இருவர்
ஓடிய குருதி தடுத்து
உயிர் தந்தனர்.
தாங்கியெனைத் தூக்கினர்.

ஆரம்ப உயிர் எனக்கு
அளித்தது தந்தை.
அடுத்ததாய் உயிரை
அளித்தது அந்த தங்கை.
இப்போ அவள் எங்கே?
இருப்பாளே என்
நெஞ்சத்தில் இங்கே. ◆

நான் காயமுற்ற காலமெண்ணி எழுதியது.

பகல் 01:30,
19-02-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

மித்திரன்,
11-12-2011.

## சிலையொன்று பேசுகிறது

வைக்காதே.
அந்த
அர்ச்சனைத் தட்டத்தை
என் சந்நிதானத்தில்
தயவு செய்து வைக்காதே.

அந்த சிறுதொகைப் பணம்
இந்த ஆண்டவனுக்கு
எதற்கடா மானிடா.
அதையும்
அப்பால் கொண்டு செல்.

உந்தன் கால்களையும்
எந்தன் இருப்பிடத்தில்
நிலை கொள்ளச் செய்யாதே.

நீ பறித்த மலர்களையும்
தொடுத்த மாலைகளையும்
தூரக் கொண்டுபோ.

உன் கரங்களை உயர்த்தி
என்னை வேண்டுவதால்
எல்லாமே கிடைத்துவிடுமா?

பசிக்குணவு கேட்டு
படலை தட்டியவனை
பரிதாபமாய் பார்க்காமல்
சுடுசொல்லால் திட்டி
துரத்தி விட்டவனே!
ஆலயம் வரும் போது
அந்த வழினில்
விறகுக் கட்டுடன்
வீழ்ந்து கிடந்தவனை
நிமிர்த்தி விடுவதற்கு
நெஞ்சம் இல்லாதவனே!
என்னிடம் காட்டும் இரக்கத்தை
ஏழைகட்கு காட்டு.
இல்லாதோர்க்கு
எதையேனும் கொடு.
அதன் பின்பு
ஆலயம் வா.
நீ கேட்பவற்றை
நிறைவாய்த் தருகிறேன்.. ◆

சூரியன் F.M.,
22-05-2010.

மாலை 03:05,
10-05-2008,
பாலமோட்டை. வவுனியா.

---

> கவிதையின் வழிந்திடா புதுவெள்ளம் புதுவது புகுத்துபவன்
> யோ. புரட்சி. அதுவே அவன் கவிவெற்றி.
>
> கவிஞர் மிகிந்தலை பாரிஸ்,
> அநுராதபுரம்.

## மோசடிப் பேர்வழிகள்

நேர்முகத் தேர்வுக்காய்
நின்று கொண்டிருக்கிறேன்.

கண்ணாடிச் சுவரிட்ட
கவர்ச்சிமிகு அறையொன்றில்
கம்பனி மனேஜர்.
எனக்குத்தான்
இந்த வேலை வரும்
இதய நம்பிக்கையில்
என் போல பலர் வெளியே.

தரச்சொல்லிக் கேட்டிருந்த
சாட்சியங்கள் எல்லாம்
சரியாக என்கோவைக்குள்.
கல்வித்தகுதி....
கணினித்தகுதி....
சமூகசேவை அனுபவம்....
சரளமான ஆங்கிலம்....
எல்லாம் இருந்ததனால்
எனக்குத்தான் இவ்வேலை.

தேர்வுகள் நிறைவாகி
பார்வைக்கு வந்தது முடிவு.
சாதகம் என நினைத்தேன்.
பாதகம் கண்டுதவித்தேன்.

கம்பனியின் தோழியொருத்தி
கண்ணெதிரே வந்தாள்.
கண்ணீர் கண்டாள்.
காரணம் சொன்னேன்.

கம்பனி மனேஜர் உன்
கைதொட்ட போதிலே
சிரித்தாயா? முறைத்தாயா?
முறைத்தேன்.

உன் கால்தன்னை
தன்கால் கொண்டு அவர்
தடவிய போதிலே
ஏற்றுக்கொண்டாயா..?
எதிர்த்து நின்றாயா?
எதிர்த்து நின்றேன்.

தகுதி இருந்திருந்தாலும்
தவிர்க்கப்பட்டிருப்பாய்
நீயென்று சொல்லியே
தள்ளிப்போனாள் தோழி.... ◆

இரவு 08:30,
20-07-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

தினமுரசு

---

## அற்புத அனுபவங்கள்

ஐந்தாம் ஆண்டு படிக்கையிலே
அரிசிக்கு வீட்டில் பஞ்சமென
அம்மாவோடு சேர்ந்து
நெல்லுமணி பொறுக்க
நீண்ட தூரம் நடந்த அனுபவம்.

பாடக் கொப்பி வாங்க
பணமில்லா போதினிலே
பக்கத்து வீட்டு
பணக்கார ஐயாவுக்கு
தண்ணீர் அள்ளிக்கொடுத்து
காசு பெற்ற அனுபவம்.

புதுப்புது
புத்தகப் பைகள்
வகுப்பில் பலர் கொண்டுவர
சொப்பிங்பையில் புத்தகம்
சுமந்த அனுபவம்.

பாதத்திலே செருப்பின்றி
பல மைல்கள் நடந்தே
பள்ளி சென்று
படித்துவந்த அனுபவம்.

இராச்சோறு வீட்டில்
இல்லாத நாட்களில்
எங்காவது கல்யாண வீட்டில்
எஞ்சிய சோற்றிற்காய்
அண்ணாவோடு சேர்ந்து
காத்திருந்த அனுபவம்.

பணக்கார நண்பனின்
பிறந்தநாள் விழாவுக்கு
பித்தளை மோதிரத்தை
தங்கமென்ற அனுபவம்.

பரீட்சைக் கட்டணம்
பள்ளியில் கேட்கையிலே
சோதிஐயா காணியின்
சோளத் தோட்டத்திலே
கிளிக்காவல் புரிந்து
சிறுபணம் வாங்கி
நிவர்த்தி செய்த அனுபவம்.

பக்கவாத நோயில் அம்மா
படுக்கையில் வீழ்ந்த போது
ஐந்துமாத தங்கைக்கு
அயல்வீட்டில் கஞ்சி வாங்கி
பாற்சூப்பி தனிலிட்டு
பருக்கிய அனுபவம்.

வறுமை தந்த
அனுபவப் பூக்கள்
வாடியே போவதில்லை.
எளிமை என்ற
எழில்மிகு பூவும்
ஏழையைவிட்டு அகல்வதில்லை. ♦

தினக்குரல், 04-07-2010.
சூரியன் FM, 2012

காலை 09:55,
15-05-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

## விளம்பர நடிகை



வெயிலில் கிடக்கும் வைரமாய்
பளிச்சிடும் கார்.
கறுப்பு நிலவு போன்ற
தார்ச்சாலை.
தொடைகள் தெரியும்படியான
எடுப்பான உடையோடு
நடைகொண்டு வருகின்றாள்
அவள்.

காவலாளி
கதவைத் திறக்கிறான்
காலினை எடுப்பாய் வைத்து
காருக்குள் ஏறுகின்றாள்.
எத்தனை வேகமாய்
இயங்குகிறது கார்.
தரிப்பிடம் நிறுத்தி
சிரிப்போடு இறங்குகிறாள்.

அவளிடம்
ஆட்டோகிராப் வாங்க
அடடா......
அளவற்ற கூட்டம்.
எல்லாமே.. காரின்
எழில் பார்த்துத்தான்.

பக்குவமாய் முடிந்தது
படப்பிடிப்பு.

அதோ
பேருந்து நெரிசலில்
நின்றபடியே பயணிக்கிறாள்
வீட்டினை நோக்கி- அந்த
விளம்பர நடிகை. ◆

தினமுரசு,
2012.

காலை 09:15,
02-05-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

---

போர்க்கால அவலங்களை புதுக்கவியில் சொல்லும்
போர்க்கவி புரட்சி.

ஜோ. ராஜ்குமார்
வள்ளுவர்புரம்

# அவள் செத்துவிட்டாள்



நீ....
இருக்கின்றாயா...?
இல்லையா...?
என்கின்ற கேள்விக்கு
பத்திரிகை பதிலளிக்கிறது.

யுத்தம்
உன்னை மட்டுமல்ல
உந்தன்
புகைப்படங்களையும்
பொசுக்கியிருக்கிறது என்பதற்கு
நினைவுப்படத்திற்குப் பதிலாய்
நிறுத்தப்பட்ட
ரோஜாப்பூ சாட்சியாகிறது.

உதித்த
உன் திகதியை
பதித்திருக்கும் பத்திரிகை
உதிர்ந்த
உன் திகதியை
உருவேற்றவில்லையே...

எனக்குத் தெரியும்
ஒருவருக்கும் தெரிந்திராது
உன்
உயிர்போன நேரம்.
காயப்பட்ட பின்னர் நீ
கைவிடப்பட்ட
கன்னி ஆகினாய்.
தனிமையில் இருந்தவுனை
காப்பாற்றி மருந்திட
கடவுள் கூட
இடம் வந்திரார்.
உறவுகள் கூட
உன்னருகில்லா
இரவு ஒன்றில் உன்
இன்னுயிர் கரைந்ததாம்.
பகற் பொழுது
பார்த்த போது
இலையான்களுக்கு
இரையாகி இருந்தாயாம்.
இப்படித்தான் சொன்னார்
இறுதியாய் உன்நிலையை
இருவிழியால் கண்டவர்.

◆

காலை 09:00,
22-06-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

# முட்டை



அதை

அவிக்கவும் வேண்டாம்.

பொரிக்கவும் வேண்டாம்.

உள்ளே

ஓர் உயிர்


உறங்கிக்கொண்டிருக்கிறது.

அதையும் வாழ

விடுங்களேன். ◆

பி.ப 02:49,
11-03-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

# முதலிரவு



இரண்டு உயிர்களின்

இன்ப உறவு.

ஓர் உயிரின்

துன்ப இரவு.

இதோ...

இன்பங்களின் முடிவிலே

துன்பம் தொடங்குகிறது.

இருவர் ஓய்வு கொள்ள

ஒருவர் வேலை ஆரம்பம்.

அடடா..

பிறவிப்பாவம்

முளைக்குமிடம் முதலிரவா... ◆

காலை 11:00,
13-12-2010,
ஜின்தோட்டை ம.வி,
காலி.

---

புரட்சியின் கவிதைகளின் தொகுப்பு,
புரட்சிகரமான சிந்தனையின் விதைப்பு

இலக்கிய விமர்சகர்
பகத்சிங்

## ஹைக்கூ தடாகம்

இயந்திரக் கலப்பைகள்
எம்கிராமம் வந்தன.
வேலையிழந்தன உழவுமாடுகள்.◆

இரவு 09:40,
20-03-2012,
வள்ளுவர்புரம்.

இங்கே உணவு உண்டதால் தான்
உயிரே போய்விட்டது.
தூண்டிலில் சிக்கியது மீன். ◆

ஜனனி,
27-12-2013.

பச்சைத் தாள்களிலே
வெள்ளைநிற ஓவியங்கள்
வயலுள்ளே கொக்குகள். ◆

மாலை 03:10,
12-02-2010,
கலேவல.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து புனர்வாழ்விற்கு அனுப்பப்பட்டபோது சிறைச்சாலை பேருந்தில் பயணித்தபடியே வயற்காட்சியைப் பார்த்து எழுதியது.

---

அவலங்களை பதியும் கவிதை
ஆறுதலை அளிக்கும் கவிதை, புரட்சி அண்ணாவின் கவிதை.

யோகேஸ்வரன் கவிர்சன்,
தரம் - 08,
வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை

## ஒரு லயன் அழுகிறது

எத்தனை காலம்நான்
இப்படியே இருக்கிறேன்.
எத்தனை பேர்
இங்கு வந்தார்கள்.
எனக்கொரு வசந்தம்
இடுவதாய்ச் சொன்னார்கள்.
அவர்கள் பேசிடும்
ஒவ்வொரு தடவையும்
அகம்தனில் மகிழ்ந்து
ஆவலாய்க் காத்திருப்பேன்.
இறுதியில் ஏமாற்றமுணர்ந்து
எனக்குள் அழுதிருப்பேன்.

மின்சாரம் பொருத்தி எனை
மினுமினுக்க வைப்பதாய்
கலகலப்பாய் பேசுவார்கள்.
கலகலப்பாய் நானிருப்பேன்.
பின்
கலங்கியே நானிருப்பேன்.

புதுக்கூரை இட்டெனை
புதுசாக்கப் போவதாய்
புன்சிரிப்போடு உரைப்பார்கள்.
புண்பட்ட என்னை.. பின்
கைவிட்டே போவார்கள்.
தளதளத்து இருக்குமென்
தைரியமிழந்த சுவர் மேனிகளை
தாங்கிப்பிடிக்க யாருமில்லை.
எவர் மேலே எப்போது

வானோசை கலை இலக்கியம் அன்று வளர்த்தெடுத்த கவிமதலை
இன்று கவியில் நற்பேரெடுத்த கவிதலை

வானோசைக் கவிஞன்
எழுத்தாளர் சாந்தனூர் அப்பன்
கிளிநொச்சி.

நான் விழுவேனோ..
கொலைகாரன் எனும்
கொடூர பட்டத்தை
என்சுவர்கள் ஏற்குமுன்
கும்பிட்டு கேட்கின்றேன்
குறிஞ்சிமலை அரசியலாளரே
கொடுப்பீர்களா உயிர்..

ஆட்டு மந்தைகளை
அரவணைத்தே காத்திருக்கும்
என் வெளியோரம்.
அறைகளின் உள்ளிருக்கும்
அன்பான மானிடரில்
நீரிருக்கும் விழியோரம்.
என் கீரிடம் ஊடறுத்து
என்னுக்குள்ளே நுழைந்து
எப்போதும் வதை புரியும்
இடைவிடா மழைத்துளிகளை
தடுத்திடும் தகுதி
தகரங்களுக்குத் தானில்லை.
இடைவிடா மழைப்பொழுதில்
இரவெலாம் தூக்கமின்றி
எழுந்தே இருப்பவரை பார்த்து
என் உளத்தில்
கண்ணீர் வடிக்கின்றேன்.
பாத்திரங்கள் வைத்து
பக்குவமாய் நீரேந்தி
வெளியே ஊற்றியபடி
விழித்திருக்கும் உள்ளங்கள்
விடிந்திடுவ தெப்போது?
விடிந்தே இருக்குமே
என் வாழ்வும் அப்போது. ◆

சூரியன் F.M,
12-07-2010.
வீரகேசரி,
2010.

மே, 2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

---

# இறைச்சிக் கோழியின் கடைசி நிமிடம்





ஒரு நிமிடம் இருக்கிறது - என்
உயிர் பிரிந்துவிட.

மனிதன் ஒருவன் பிறந்தாலும்
மனிதன்
ஒருவன் இறந்தாலும்
மனிதர்
இருவர் இணைந்தாலும்
எங்களில் பலருக்கு
இல்லாமலாகிறது ஆயுள்...

மானிடா.... உந்தன்
துக்கத்து நினைவுக்கும்
கொண்டாட்ட குதூகலத்திற்கும்
எங்களின் உயிரையன்றோ
இல்லாமல் செய்கிறாய்.

உந்தன் மொழி
எந்தனுக்குப் புரிகிறதடா.
நெஞ்சுப்பகுதி கறிக்கெனவும்
என் காற் பகுதி
சூப்பு ஆக்கி
சுவைப்பதற்கெனவும்
சொல்வது கேட்கிறதடா.

சூரியன் FM,
03-05-2010.

என் மொழியிங்கே
எவருக்கு கேட்டிடும்.
எங்களையும்
வாழவிடுங்கள் என்று
என்னிதயம் ஏங்குவது
இங்குளோர்க்கு கேட்டிடுமா?

அந்த மனிதன்
ஆவியைத் துறந்து
இன்று....
எட்டாவது நாள்.
ஒன்று கேட்கிறேன்.
ஒரு மனித உயிர்
ஓடிப் போனதற்காய்
இன்னும் சில
எமைப்போன்றோர் உயிர்கள்
இல்லாமலாக வேண்டுமா?

என்னை பேசவிடாமல்
இதோ..... என்
கழுத்தினிலே கத்தி.
ஆ.... ◆

காலை 09:57,
30-03-2008,
பாலமோட்டை, வவுனியா.

## ஏழையெந்தன் கைகள்

மண்வெட்டி வாங்கிட
காசில்லா குடிசையிலே
சுற்றிவளர்ந்த புற்களை
சுறுசுறுப்பாய் பிடுங்கிடும்.

மழைக்கால பொழுதுகளில்
வீடிருந்து குசினிக்கும்
விரைந்து கிணற்றடிக்கும்
ஓடிநான் போகையிலே
உச்சந்தலைக்கு குடையாகும்.

காகிதம் இல்லா
காலந்தனிலே
அவசரத்திற்கு எழுதிக்கொள்ள
அச்சுத்தாள் ஆகிடும்.

சீனி கலந்து
தேநீர் குடிக்க
செல்வமற்ற ஏழையெனக்கு
தேநீருடன் சுவைக்க
சீனி வைக்கும் தட்டாகிடும்.

தலையணையே இல்லா என்
தாழ்ந்த குடிசையிலே
இரவிலும் பகலிலும்
இன்பமாய் உறங்கிட
தலையணையாய் துணைபுரியும்.

தாய்ப்பூனை இறந்தபின்னும்
தப்பிப்பிழைத்த குட்டிகட்கு
பாலின்முலை எனநினைத்து
அவ்வப்போ உறிஞ்சிடவே
அன்னையாகி விரல் கொடுக்கும்.

காலை 09:55,
14-09-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

---

வள்ளுவர்புரம் தந்த யோ. புரட்சி
வல்லகவி படைப்பில் செய்தான் புரட்சி.

தியத்தலாவ H.F. றிஸ்னா
துணை ஆசிரியர், பூங்காவனம்

## விஞ்ஞானிகளும் அகதிகளும்



செவ்வாயில் குடியேற
சிந்திப்பது நீங்கள்.
சொந்த ஊரில் குடியேற
தவிப்பது நாங்கள்.

பூமிக்குள் புதைந்திருக்கும்
எரிமலைகளை
தேடுகிறீர்கள் நீங்கள்.
புதைத்துவிட்டு ஓடிவந்த
உறவுகளின் எலும்புகளை
தேடிக்கொண்டிருக்கிறோம் நாங்கள்.

சூரியனின் வெப்பத்தையும்
சூட்சுமமாய்
அளந்தவர் நீங்கள்.
சோகங்களால் சூழ்ந்துபோன
உள்ளங்களின் வெப்பத்தையும்
அளந்தே தாருங்கள்.

கடல் நீரை நன்னீராக்க
கண்டு பிடித்தீர் வழி-எம்
கண்ணீரை கட்டுப்படுத்த
காட்டுங்கள் ஒருவழி.
குருதியின்றேல் மரணமென
சொன்னவர் நீங்கள்.
குருதியை இழந்தபின்னும்

வாழ்ந்தவர்தாமே நாங்கள்.
நீண்டநாட் பசியிலே
நிலைத்தஉடற் கலங்கள் பற்றி
பரிசீலனை தேவையா?
பயன்படுத்துங்கள் எங்களை.
நீங்கள்
கண்டுபிடித்த ஆயுதங்களின்
பரிசோதனைக் களமானதே
எங்கள் தேசம்.

சொல்லுங்கள்
நீங்கள் கண்டுபிடித்த
எந்தக்கருவியை பயன்படுத்தி
இழந்த நிம்மதியை
எமக்குள் புதுப்பிப்பது.

நிறுத்துங்கள்.
மனிதாபிமான தேசத்திலே
உங்கள் மனங்களை
மீள்குடியேற்றுங்கள்.
மாண்டுபோன தேசத்திலே
மறுபடி நாங்கள்
மீள் குடியேறுவதற்கு. ◆

ஒரு இனத்தின், மொழியின் இருப்பு என்பது அது சார்ந்த படைப்புக்களில் தங்கியுள்ளது. கவிதைக்கு பொய்யழகு என்பார்கள். ஆனால் மெய்யே அழகு என்பதை யோ. புரட்சியின் யதார்த்தவரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

சிரேஷ்ட அறிவிப்பாளர்
செல்ட்ரன் அன்ரனி
சக்தி FM வானொலி.

பி.ப 02:10,
31–05–2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

## ஆண் விபச்சாரன்

திருமணம் ஒன்று
செய்து வைத்தார் அப்பா.
திறமைகள் எனக்கு
நிறைந்திருந்த நிலைகாட்டி
சீதனம் பெற்றார்.
பாவம் செய்த
பாவி நானோ..?
இடையில் முறிந்தது
என்மண வாழ்வு.

இன்னுமோர் மணம்
ஏற்பாடு செய்தார்
எந்தனின் அம்மா.
அரச உத்தியோகத்தை
அத்தாட்சியாக வைத்து
சொத்தும் நகையும்
பத்தும் பலவும்
சீர் வரிசையாக
தீர்மானித்து வாங்கினார்.
இந்தத் திருமணமும்
நொந்து நூலானது.
வந்த பெண்ணுக்கு
வலுமிக்க நோய்.
வையம்விட்டே
போனாள்
அந்தத் தாய்.

தனியாக நான்
தவித்திருக்க லாகாதென
இனிதான உறவுகள்
எல்லாம் சேர்ந்து
நல்லதோர் பெண்ணை
கல்யாணம் பார்த்தனர்.
அதிகாரி அந்தஸ்தெனக்கு
அமைந்திருப்பது காட்டி
அதிக சீதனத்தை
அள்ளியே வாங்கினர்.
நெஞ்சிலே ஓர் உறுத்தல்
நிறைய எனக்கிருந்தும்
அஞ்சியே நின்றேன்
அதைவெளியே காட்டாமல்
ஆண் ஆகிய நான்.

நாளை வரும்
காலை திருமணம்-இன்று
மாலையென் மனது
மௌனமாய் சொல்கிறது
வாழ்க்கை இழந்தவுனக்கு
வாழ்க்கை தருவோர்க்கு
வாரி வழங்க வேண்டிய நீ
வாரி வாங்கிடும்
காரியம்செய்கிறாயே...
அடே போடா
ஆண் விபச்சாரா....

காலை 11:42,
26-07-2011,
புதிய சேனபுர,
பொலனறுவை.

# நீர் ஆண்டவரின் பிள்ளையல்ல

நாங்கள் பாவிகள்
நீருமா பாவி...

நாங்கள்
பாவங்கள் செய்தோம்.
நீருமா செய்தீர்

ஓ.. புரிகிறது இயேசுவே...
பாவிகள் எங்களின்
பாவங்களை வாங்கி
உம் தோளில் சுமந்ததால்
எமக்கான தண்டனை
உமக்கு கிடைத்தது.

இரத்தம்
சிந்த வேண்டியது நாங்கள்.
எமக்காக சிந்தியதோ நீங்கள்.

செய்த பாவங்களுக்கு
சிலுவை சுமக்க வேண்டியது
நாங்கள்.
எங்கள் பாவங்களை
எடுத்துக் கொண்டதால்
சுமந்ததோ நீங்கள்.


உங்கள் சிரமதை
உறுத்திய முள்முடி
எங்கள் பாவங்களின் படி..
நீர்
ஆண்டவரின் பிள்ளையல்ல.
ஆவி பிரியும்வரை
அடித்துக் கொன்றவரை
அன்னையாகி மன்னித்தீரே..
நீர்
ஆண்டவரின் பிள்ளையல்ல.
நீரே ஆண்டவன்.

பிள்ளைகளுக்காய்
பால் கொடுக்கும் அன்னையர்
பாரினில் பலர்.
இந்த
பாவிப் பிள்ளைகளுக்காய்
இரத்தத்தோடு
இன்னுயிரும் தந்த
இணையற்ற அன்னை நீர்.

என் பிள்ளைகள்
எனக்காய் அழுவார்கள்.
இதயம் நோவார்கள்.
அவர்கள் அழக்கூடாது.
அப்படி நினைத்தன்றோ
ஆண்டவரே நீர்
ஆவியுடன் மீண்டுவந்து
அருங்காட்சி தந்தீர்.
என்னவென்பது
உம்கருணையை. ◆

மாலை 05:30,
25-12-2010,
பூசா சிறை, காலி.

## காதல் தேர்தல்




தெளிவாய்த் தெரிகிறது
நம் காதல் தேர்தலுக்கு
பெற்றோர்
வாக்களிக்க மாட்டார்கள்.
புறக்கணிப்பே செய்வார்கள்.

நிறைவேற்று அதிகாரத்துடன்
நீயும் நானும்
இயங்குவதைத் தவிர
இங்கு வேறு வழியேது.

உதிரிக்கட்சிகள் போல
ஊரார் சிலர் எம்மோடு
கூட்டு சேர்ந்தாலும்
வலுமிக்க எதிர்க்கட்சிகளாய்
நிலைத்திருக்கிறார்கள் பெற்றோர்கள்.

காலமின்னும் கடந்தால்
செல்லாத வாக்குகளாய்
சென்றுவிடும் நம்நிலைமை.

எத்தனை வாக்குறுதியை
நானளித்த போதும்
ஏற்கிறார்கள் இல்லை
என் பெற்றோர்.
திருமண பதவி கிடைத்ததும்
கொடுத்த வாக்குறுதியை
குழிதோண்டி
புதைத்து விடுவேனாம்.

காணாமல் போனது
காதல் ஜனநாயகம்.
கண்டிப்பு எனும் சாட்டில்
பெற்றோரின் சர்வதிகாரம்.

எம் காதலை
எத்தனை கீழ்த்தரமாய்
பிரச்சாரம் செய்கிறான்
உன் மாமன்.

ஒன்று தெரியுமா?
நாம் செய்திடும்
இரகசிய சந்திப்புக்கள்
நமக்கு எதிராய்
நாமே ஒட்டும்
சுவரொட்டிகள் போல் ஆயிற்றே.

கடிதப் பரிமாற்றத்தை
கச்சிதமாய் செய்துதந்த
உன் பாசத்தம்பி
கட்சிமாறி
காட்டிக் கொடுத்துவிட்டான்.

எம்மை எதிர்ப்போரை
நிராகரிக்கப்பட்ட
வாக்குகளாய் ஆக்கி
நிச்சயம் வெல்வோம்
காதல் தேர்தலில்.
அடிக்கடி இடம்பெறும்
ஆட்சிக்கான தேர்தலா இது?
ஆயுளில் ஒருமுறை வரும்
காதல் தேர்தல். ◆

வீரகேசரி,
18-04-2010.

பி.ப 12:30,
12-12-2009,
வ/முஸ்லிம் ம. வி.

---

இருள் நெஞ்சைத் திறந்திடும் வெளிச்சமான வரிகள்
புரட்சியின் மொழிகள்

சியாளினி மோகன்
இலண்டன்.

# தங்கமான புருசன்

சீதனம் வாங்கி நான்
திருமணம் செய்தால்
அம்மாவின் பார்வையிலே
தங்கமான புருசன்.

சீதனமே வேண்டாமென
சிரித்தமுகம் காட்டி
மனைவியை கைப்பிடித்தால்
மாமியார் பார்வையில்நான்
தங்கமான புருசன்.

கட்டிக்கொண்ட மனைவியை
என்
காலடியில் வைத்திருந்தால்
தந்தைக்கு நான்
தங்கமான புருசன்.

அன்பு மனைவியவளுக்கு
அடங்கியே வாழ்ந்தால் தான்
அவளின் பார்வையில் நான்
தங்கமான புருசன்.

எண்ணங்கள் வேறான
உள்ளங்கள் அதிலே
எப்போதுதான் தெரிவேனோ
தங்கமான புருசனாய். ♦

காலை 06:56,
22-09-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

சுடர் ஒளி,
18-11-2011.

## பிச்சைக்காரன் தரும் பிச்சை

துரத்தாதே அவனை.
வாசலில் வைத்தே
வசைபாடி அனுப்பாதே.

கழித்து வைத்த
உணவையும்
கால்பைசாவும் கொடுத்து
கண்ணீர் வடிக்கச்செய்யாதே.
இதயத்து உணர்வோடு
ஏதேனும் கொடு.
இதோ பார்
ஏராளம் புண்ணியங்களை
எதுவுமே இல்லா அவன்
பிச்சையிட்டுப் போகின்றான்
பாவி உந்தனுக்கு. ◆

தினமுரசு,
12-09-2013.

இரவு 08:50,
20-07-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

## விபச்சாரியின் கல்லறைவாசகம்

இருட்டுப் பொழுதிலே
என்னறைக்கு வந்தவர்களே..
வெளிச்சப்பொழுதிலென்
கல்லறை வரமாட்டீரோ... ◆

மித்திரன்,
11-09-2011.

---

இனத்தை மட்டுமல்லாது ஏனைய உயிர்களையும் நேசிக்கும் புரட்சியையும், புரட்சியின் கவிதையையும் நேசிக்கிறேன்.

வாஞ்சைமிகு வானொலி நேயர்
சிவஸ்ரீ க.ஐ யோகராசா குருக்கள்
பாண்டிருப்பு, அம்பாறை

## உணர்ச்சி

எந்தக் கைகளால்
இவளுக்கு
தாலி இட்டாயோ
அவைகளை
இழந்தாய் யுத்தப்பொழுதில்.

யாருக்காக
உழைத்திடப் போனாயோ
அவர்களாலேயே
புறக்கணிக்கப்படுகின்றாய்
சமூகத்தில்.

உயிரைக் கொடுக்கவும்
துணிந்தாய் அன்று.
உனக்காய்
ஒரு பைசா கொடுக்கவும்
யாருமில்லை இன்று.

எல்லாக் காலமும்
எம் குடும்பத்தை
இனிதே சுமந்தாய்.
இன்றோ
சக்கர நாற்காலியில்
தலைவா உன் வாழ்வு.
உன்னைச் சுமக்கும்
ஒரு பாக்கியம்
உண்டானது இவளுக்கு.

உடலில்
உனக்கு
உணர்ச்சியற்றுப் போகலாம்.
உணர்ச்சி இருந்தும்
உணர்வு இல்லா
மனிதர் முன்னே
நாம் உயர்ந்தவர்கள். ◆

மாலை 03:50,
21-06-2011,
புதிய சேனபுர,
பொலனறுவை.

---

நீறு பூத்திருக்கும்..... அங்கு நீரும் பூத்திருக்கும் புரட்சியின் கவியில்...

கவிஞர் அமலதாஸ்
இரத்தினபுரி

## தாய்க்கொரு தாலாட்டு

நிலவு காட்டி
உணவு ஊட்டிய
உறவு உனக்கு
இரவு தன்னில்
பாடிடும் தாலாட்டு.
இது...
மீசைகூட முளைக்காத
உன் ஒரே பிள்ளையின்
உள்ளத்தின் பாட்டு.

களை பிடுங்கி
கதிர் அறுத்து
தலை சுமந்த உனக்கு
கடும்நோவு இருக்குமம்மா
மடிமீது தலைவைத்து
மாதாவே கண்ணுறங்கம்மா.
ஆராரோ ஆரிவரோ-என்
அம்மாபோல் இங்கெவரோ...

பாதணி இல்லாமலே
பாதையெல்லாம் நடந்ததாலே
முள்குத்திய பாதங்களை
என்கையால் தடவுகிறேன்.
என்னம்மா கண்ணுறங்கு
இதயசோகம் விட்டுறங்கு.

ஆராரோ ஆரிவரோ-என்
அம்மாபோல் இங்கெவரோ...

மாலைநேர வகுப்பு முடித்து
காலை சோற்றை சூடாக்கி
பானையிலே வைத்திருக்கேன்.
பக்குவமாய் ஊட்டுகிறேன்.
பச்சைக் குழந்தைபோல்
பாவ மறியா
நேச அம்மா
நீ உறங்கம்மா.
ஆராரோ ஆரிவரோ-என்
அம்மாபோல் இங்கெவரோ...

ஒருபிள்ளை நானென்று
சிறுவேலை செய்யவிடாமல்
முழுவேலையும் செய்யுமுன்னை
முழுக்காலமும் சுமப்பேன்னு
சிறுபிள்ளை சொல்லுகிறேன்
பெருமனசாய் உறங்கம்மா.
ஆராரோ ஆரிவரோ-என்
அம்மாபோல் இங்கெவரோ...

காய்ச்சல் உனக்கு வந்தபோது
கையிருந்த காசிற்கு

பனடோல் தானும் வாங்காது
பரீட்சைக்காக தந்ததாலே
ஓடிப்போகா காய்ச்சலால்
உடம்புனக்கு சுடுதேம்மா
ஒத்தடம் நா தாறேம்மா
நித்திரை நீ கொள்ளம்மா.
ஆராரோ ஆரிவரோ-என்
அம்மாபோல் இங்கெவரோ...

பித்தவெடிப்பு காலிலிருந்தாலும்
நித்தம் தூரம் நடக்கும்
நெஞ்சத்தவளே...
சித்தம் கலங்கா உனக்கு
சீக்கிரமாய் துயர் விலகும்
சிந்திக்காமல் கண்ணுறங்கு.
ஆராரோ ஆரிவரோ-என்
அம்மாபோல் இங்கெவரோ...

ஒருசேலை தன்னையே
ஒவ்வொரு நாளும் உடுத்துமுனக்கு
பலசேலை வாங்கித்தர-நான்
பணமுழைக்கும் காலம்வரும்
மனம் தன்னில்
மாசில்லா
மாதாவே கண்ணுறங்கு.
ஆராரோ ஆரிவரோ-என்
அம்மாபோல் இங்கெவரோ... ♦

சூரியன் F.M.,
08-11-2012.

இரவு 09:20,
14-05-2012,
வள்ளுவர்புரம்.

எனையீன்ற தாய் திருமதி செல்லமுத்து யோகநாதன்

---

வானலை வழியே வந்து எங்கள் வீடுகளையும், இதயங்களையும் குளிர்விக்கும் கவிமழை புரட்சி.

கவிஞர் பாக்கியராஜா
பாட்டாளிபுரம், திருகோணமலை.

# ஆண்டவனின் அவதாரம்

அவரைச் சொன்னார்கள்
அவதாரம் என்று.
ஆண்டவனின் வாரிசாக
அவனி வந்தவராம்.

அனைத்தும் படித்த
ஆங்கிலேயர் கூட
அவரின் அருள் பெற
அணிவகுத்து நிற்பார்களாம்.

ஏராளம் நாடுகளில்
இவரின் கிளையுண்டாம்.
அவரின் முகம்தனை
அன்றாடம் பூஜித்தால்
அகலுமாம் வினைகள்.

வழக்கிலே வெல்லவும்...
வடிவாயொரு வெளிநாடு
வாழ்ந்திட செல்லவும்..
எந்த வரமும்
இவரிடம் பெறலாமாம்.
அவரின் அன்புமகன்
ஆங்கிலேயப் பள்ளியிலே
தங்கியிருந்து படிக்கிறானாம்.

நடமாடும் அந்த
நன்மை தரும் தெய்வத்தை
நமஸ்கரிக்க ஆசைகொண்டேன்.
சந்தித்து அவர் பாதம்
சரணடைய உளம் நினைத்தேன்.
அவருக்கேயுரிய
அந்தரங்க உதவியாளரிடம்
ஆசையைச் சொன்னேன்.

இருபது ஆயிரம்
தருமமாய்த் தந்து
பற்றுச்சீட்டு எடு.
பார்க்கலாம் அவரை
நேர்த்தியாய் சொன்னார். ◆

சூரியன் FM,
19-04-2013.

இரவு 08:52,
23-06-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

## கிடைக்காதது

காதல் செய்து
கல்யாணம் புரிய
கன்னி நான்
ஆசைப்பட்டேன்.
காதலன்
கிடைக்கவில்லை.

கல்யாணம் பண்ணி
காதலிக்கலாம் என
கற்பனை செய்தேன்.
சீதனம்
என்னிடம் இல்லை. ◆

மித்திரன்,
02-05-2010.

பி.ப 12:30,
27-11-2009,
வ/முஸ்லிம் ம. வி.

உணர்ச்சிகளின் துளிர்ப்பும், தமிழின் உயிர்ப்பும் புரட்சியின் கவிச்சோலையில் பூக்கின்ற வைரமலர்கள்.

கவிஞர் வன்னியூர் செந்தூரன்
ஒட்டுசுட்டான்.

## சாதி ஒழிப்பு

மாப்பிள்ளை
சாதிக் குறைவானவராம்
மகளின் திருமணத்தை
நிராகரிப்புச் செய்தார்
சாதிகள் ஒழிப்பு
சங்கத்தின் பொதுச்செயலர். ◆

இரவு 09:15,
13-08-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

## புரட்சிப்பெண்

கழுத்தினிலே
மஞ்சள் தாலி.
கால்களிலே
வெள்ளிக் கொலுசு.
நெற்றியிலே
சிவந்த குங்குமம்.
நிறம் மாறாத
நீலச் சேலை.

முக்கனிகளில் ஒன்றான
முற்றியே பழுத்திட்ட
வாழைக்குலைகளை
வடிவாக ஏற்றி
துவிச்சக்கர வண்டிதனை
துணிவாய் ஓட்டி
சந்தைதனில் விற்று
சம்பாதிக்கிறாள் பணம்.

அவளின்
அபார துணிச்சல்கண்டு
பாராட்டுப் பத்திரம் வழங்கும்
சமுதாயக்காரர்கள் ஒருபுறம்.

காளையர் வேலை
கன்னி இவளுக்கேனென
எண்ணி ஏளனம் செயும்
விழிகள் மறுபுறம்.

போற்றுதலை எதிர்பாராமல்
தூற்றுதலை பாராமல்
துணிவோடு
சுமந்து செல்கிறது
வாழைக் குலைகளை
வண்டியது நிதமும்.
பேச்சுகளில் மட்டுமே
பெண்ணுரிமை பற்றி
பேசித்திரிவோர் மத்தியில்
செயலை மட்டுமே
தினமும் துணிந்துசெயும்
அவள் தானே
அவனியில் புரட்சிப்பெண். ◆

மாணிக்கபுரம் கிராமத்து அந்த அம்மாவை எண்ணி எழுதியது

தினமுரசு, 07-10-2010.
சூரியன் FM, 08-03-2012.

மாலை 03:00,
16-07-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

## யோகேஸ்வரி

தெய்வம் உண்டா
இல்லையா என்றே
என் மனமறியா காலமதில்
தெய்வம் என்பது
மனித வடிவமென
உங்களைப் பார்த்தே
உணர்ந்துகொண்டேன்.

தாய்மை என்பது
தளிர்பெறுதல்
மட்டுமல்ல என்பதை
உங்களால் மட்டுமே
உறுதியாய் நம்பினேன்.

உள்ளத்தில் நல்ல உள்ளம்
உறங்காதென்றார் கண்ணதாசன்.
எனக்காகவே
விழிப்பாய் இருந்த
உங்கள் உள்ளம் பார்த்தே
உண்மையில் இவ்வரி நம்பினேன்.

எந்த விஞ்ஞானமும்
இதை நம்பாது.
நம்பித்தான் ஆக வேண்டும்.
நான்
வயிறார உண்கையிலே
உங்கள் பசி தீர்ந்ததே.

சிரித்தலின் பண்பு
சிரிப்பவர் உடலில்
சிறந்திடும் ஆரோக்கியம்.
சிரிப்பிற்கு இன்னொரு பண்பு
இன்னொருவர் சோகம் தீர்க்கும்.
எந்தன் சிரிப்பினால்
உங்கள் சோகம் தீர்த்தீர்களே...

எனை வளர்த்த தாய்ப்பறவையே
மாமி என்றே...
மனமுருகி நானழைக்கும்
மற்றுமொரு தாயே
இப்புவி விட்டு போனபின்பும்
எனைஅணைக்கும் தாய்மையே...
இறந்தாலும் நீங்கள்
என்னுடன் என்பது
உண்மையே.... ◆

பி.ப 01:40,
01-01-2011,
பூசா சிறை, காலி.

## பாலியல் வன்புணர்ச்சி

பத்திரிகையிலே
படித்தேன் அந்தச்செய்தி.
படிக்கும் மாணவிமீது
பாலியல் வன்புணர்ச்சியாம்.
பிறப்புச் சான்றிதழ் பெற்ற
மிருகங்கள் அவர்கள்.
உறுமிக்கொண்டேன் மனதில்.

கன்னி ஒருத்தியின்
ஒப்புதலின்றி
காளை அவளை புணர்தல்
பாலியல் வன்புணர்வாம்.

நல்ல வேளை
நம் வீட்டு
கணவர் பற்றி
எந்தப் பத்திரிகைக்கும்
எதுவும் தெரிந்திருக்கவில்லை. ◆

தினக்குரல்,
06-03-2011.

காலை 07:50,
15-01-2011,
பூசா சிறை, காலி.

---

காத்திரமாய் கவிதரும் சரித்திரக்கவி புரட்சி.

கவிதாயினி சுகந்தினி
வவுனியா.

## கொடுத்தால் மட்டும்..

நாய்க்குட்டி வேணுமா..?
நம் நட்பொருவர்
அப்பாவிடம் கேட்டார்.
பெட்டையா? கடுவனா?
அப்பா கேட்டார்.
பெட்டையென்றார் அவர்.
வேணாமென்றார் இவர்.

கோழியிருக்கு வேணுமா?
கூலிக்கார தம்பி கேட்டார்.
பேடா... சேவலா..
அம்மா கேட்டார்.

பேடு.

முட்டை இடுமா?
இடுகின்ற பருவம்.

எனக்கே அதைத் தா...
எடுத்தார் அம்மா.

கொடுக்கும் பெண்ணினத்தை
எடுத்துக் கொள்வதே
எம் சமூக வழமையாச்சி... ◆

மாலை 04:15,
01–06–2011,
புதிய சேனபுர,
பொலனறுவை.

வள்ளுவர்புரம் தரு வாடா மல்லிகைச் செடியிவன்... புரட்சி
புதிதாய்ப் புதிராய் பூச்சுரக்கும் கவிமலர்க் கொடியிவன்
கவிஞர் பிரதீபன்
திருகோணமலை.

## பாம்பு பரவாயில்லை



பாம்பென்றால்
படையும் நடுங்குமாம்.
எந்தப் பாம்புமே
துரத்தி துரத்தி
துன்பம் தருவதில்லை
சில
தோழர்கள் போல...

நம்பிய நண்பன் கக்கிடும்
நம்பிக்கைத் துரோகமெனும்
நஞ்சினை விட
அரவமிடும் நஞ்சு
ஆற்றல் குறைந்ததே.

தேடியே வந்து
தீண்டுவதில்லை பாம்புகள்.
தேடியே வந்து
தீ மூட்டுகிறார்கள்
சில நண்பர்கள்.

போவெனச் சொன்னால்
போய்விடும் நாகமென
பொன்னான ஒரு வாக்குண்டு.
போய்விடாமல் தொடர்ந்து
வந்து
புதைகுழி உருவாக்கும்
நண்பருக்கு எதுதான் உண்டு.


சிரித்தபடி பழகிவிட்டு
தீண்டல்செயும் துரோகத்தை
செய்வதில்லை பாம்புகள்.
சிரித்தபடி முகம்காட்டி
நெருப்பினை கக்கிவிடும்
நிலையில் சில நண்பர்கள்.
பாம்பே...
பரவாயில்லை நீ.
உன்னைப் பார்த்து
உளம் நடுங்குவதைவிட
என்னையே பாழாக்கும்
என் நண்பர்களைப் பார்த்து
எப்போதும் நடுங்குகிறேன். ◆

இந்தக் கவிதையை எழுதத் தொடங்கியபோது வலதுகை பெருவிரலில் அமர்ந்திருந்த வெட்டுப்பூச்சி கவிதை எழுதி முடியும் வரை விரலிலேயே இருந்தது.

இரவு 09:00,
14-04-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

சூரியன் FM,
30-03-2012.

## இளவரசர் வில்லியம்சும் இவனும்..



இளவரசர்
சாள்ஸ் வில்லியம்சுக்கும்- இந்த
வேலை இல்லாதவனுக்கும்
ஒரே வயதுதான்.
அவருக்கு...அங்கே
அழகி ஒருத்தியுடன்
திருமண நிச்சயதார்த்தம்.
எனக்குத்தான்
ஏதுமில்லை.
எனக்கு
இல்லையென்பதில்
எதுவுமே பிரச்சினை இல்லை.
எனக்கு முன்பிறந்த
திருமண வயதை கடந்த
இரண்டு அக்காக்கள் தான். ◆

பி.ப 11:15,
06-12-2010,
பூசா சிறை, காலி.

கடும் மழை. சிங்கள பத்திரிகையில் வில்லியம்ஸ் ஜோடி படம் பார்த்தபோது எழுதியது.

---

வார்த்தைகளை ஒட்ட வைத்து வரிகளை மிகைப்படுத்தி கவியாக்கும்
அநேகர் வாழும் காலத்தில் வாழ்க்கையை வரிகளாக்குபவர்
யோ. புரட்சி

கவிதாயினி த. எலிசபெத்,
தலவாக்கொல, கண்டி.

## அநாதையின் ஆத்மா



கட்டிக்கொள்ள ஓராடையின்றி
கலங்கிநான் நின்றபோது
கண்பாராது நின்ற மைந்தரே!
தயவுசெய்து என்
சவப்பெட்டியையும் பாடையையும்
சம்பிரதாயத்திற்காய்
அலங்காரம் செய்யாதீர்கள்.

உயிர்கொண்டு நான்
உலவிய போதிலே
ஒருபிடி
உணவிடா நீங்கள்
உயிரற்று தூங்கும்போது
வாய்க்கு அரிசியேன்
வழங்குகிறீர்கள்.

தாய்மை உணர்வோடு உங்களை
தழுவவந்த போதெல்லாம்
தூய்மையற்ற வார்த்தைகொண்டு
தூற்றிய நீங்கள் .
வழியனுப்பும் வேளை பார்த்து
தேவாரம் ஓதியெனை
திருப்தி செய்ய முனைவதேன்.

கைச்செலவிற்காய்
கால்பைசா தானும்
காட்டாத நீங்கள்
நெற்றிப்பொட்டுடன் நாணய
குற்றி ஒன்றினை
பற்றிடச் செய்ததேனோ.....

இருளாயிருந்த என்வாழ்விற்கு
ஒளிகொடா நீங்கள்
இறந்த எந்தன்
சடலம் தெரிந்திட
இரண்டு குத்து விளக்கு
ஏன்தான் ஏற்றினீர்கள்?
பசிக்கு உணவிடாதோரே
சடலத்திற்கு பூவிடாதீர்கள்.

அநாதைகள் இல்லத்தில் நான்
அழுதழுது கிடந்தபோதில்
ஆண்டுக்கு ஒருமுறைதானும்
தேடிவரா நீங்கள்
ஏட்டிக்கு போட்டியாய்
ஏங்கிஏங்கி அழுவதுதான்
ஏனென்று புரியவில்லை. ◆

தினக்குரல்,
26-09-2010.

காலை 08:10,
20-07-2010,
வ/தொழினுட்பக் கல்லூரி.

## சுற்றாடல் கீதம்

புத்தம்புது வாழ்க்கை நம்மைத் தொடுமே
நித்தம் சுத்தம் காத்தால் என்றும் சுகமே
சுற்றுச்சூழல் யாவும் எங்கள் சொந்தமே
தூய்மையாக வைத்தால் என்றும்நலமே
வாழும் இடம் எதுவாக இருந்தாலுமே
நாளுமதை தூய்மையாக்கி காப்போமே.



ஆரோக்கிய தேகம் என்றும் நிலைக்க
அனுதினம் தேக சுத்தம் காத்துக் கொள்ளுவோம்
வீடுபள்ளி ஆலயம் எங்கும் நாங்கள்
விருப்புடன் சுகாதார தொண்டு ஆற்றுவோம்
சூழல் சுத்தம் காத்திடும் எல்லோருமே
தாங்கும் புவி நண்பர் என்று சொல்லுவோம்.

வீறுகொண்டே வந்திடும் நோய்கள்தன்னை
விரட்டிடும் சுகாதார பழக்கமுறை
நாடுவளம் பெற்று நன்றே உயர
வேண்டுமே சூழல் மீதுபெரும் அக்கறை
அலட்சியம் தவிர்த்தே அனைவரும் திரள்வோம்
அழகிய சூழலில் வாராது ஒருகுறை. ◆

---

கல்வியமுது எனக்கு ஊட்டிய வள்ளுவர்புரம் பாரதி மகா வித்தியாலயத்திற்கு 'சுற்றாடல் கீதம்' இசைப்பதற்காக எழுதி கொடுக்கப்பட்ட கீதம்இது. இசையோடு இக்கீதம் இப்போதும் இசைக்கப்படுகிறது.

## செவ்வாய்க்கிரகம் சினக்கிறது

உங்கள்
தாள் தொட்டு கேட்கிறேன்
கால் பதித்து விடாதீர்.
மானிட வாசத்தை - என்
மண்ணிலே பதித்து
மாசு படுத்தாதீர்.

உங்கள் உருவங்கள்
எந்தன் இடத்திலே
இல்லாததால் தானே
இத்தனை நாளும்
இன்புற்று இருக்கிறேன்.
ஆரம்பத்தில் நீங்கள்
அடியெடுத்து வைப்பீர்கள்
அடுத்த நகர்வுகளில்
அணுகுண்டையும்
கொண்டுவந்து வைப்பீர்கள்.

சந்தன வாசம்
என்னிடத்தில் இல்லாவிடினும்
கந்தக வாசம் சுமக்க
கடுகளவும் விருப்பமில்லை.
தண்ணீர் அதிகமிங்கு
விளையாவிடினும்
கண்ணீர் சுமக்க
சத்தியமாய் பிடிப்பில்லை.

இறைவனின் பிள்ளையாய்
இறங்கிவந்த இயேசுவை
சிலுவை ஏற்றிய
பெரிய உலகத்தோரே...
இங்கு...
பூக்கள் பூக்கா விடினும்...
ஆயுதங்களின்
புகை பூக்காதிருக்க...
நதிகள்
பாயாவிடினும்
குருதிகள் பாயாதிருக்க...

சிரிப்பொலி
இல்லாவிடினும்
உங்களால்
அழுகையொலி பரவாதிருக்க...
பயிர்கள்
விளையாவிடினும்
உங்களால்
உயிர்கள் வீழாதிருக்க...


இங்குமட்டும்
இறங்காதீர்கள்.
எங்களை
சிதைக்காதீர்கள்.
செவ்வாய்க் கிரகமென்
சினத்தை புரிந்திடுங்கள். ◆

பயணவேளை பேருந்து பழுதடைந்து நின்றவேளை எழுதியது.

சூரியன் FM,
06-02-2012.

மாலை 03:32, 01-01-2012,
மினிகிரிகம, (தபால் நிலையம் முன்).

# இதுதான் மாடிவீடு



என்
மாடிவீடு பார்த்து
மலைத்துப் போயிருக்கும்
மண்வீட்டு ஏழையே.....
மனதை மாற்றிடு.

உன்வீடு போலவிங்கு
பூஞ்செடி நடமுடியாது.
சொந்தமாய்
கிணறுதோண்ட முடியாது.
தைப்பொங்கல் நன்னாளில்
முற்றத்தில் நல்ல
பொங்கலிட முடியாது.

கூவிடும் கோழியும்
கூட்டமாய் மாடுகளும்
வளர்த்திட முடியாது.

செங்கரும்புத் தோட்டமும்
செம்பருத்தி பூமரமும்
வளர்ப்பு செய்து
வடிவுபார்க்க முடியாது.
பழம் கொரிக்கும் அணிலையும்
தினம்வரும் கிளிகளையும்
மாமரத்து கீழிருந்து
மனம்நிறைய இரசிக்கமுடியாது.

ஏங்காதே ஏழையே!
என்போன்ற
எந்திர வாழ்வு
உனக்கு வேண்டுமா? ◆

விடிகாலை 02:50,
06-10-2010,
கொழும்பு.

---

பேசாப்பொருள்களை எல்லாம் பேச வைக்கும். சிந்தித்ததை எழுதாமல் சந்தித்ததை எழுதுவதே யோ. புரட்சியின் தனித்துவம்

மருதோடை நிலா
நெடுங்கேணி.

## மனைவியர் சிலர்க்கு மட்டும்....

இல்லத்தரசி என்பது
இவர்களுக்கு
இடப்பட்ட பட்டமெனினும்
வெறும் வேலைக்காரிகளாகவே
வீற்றிருக்கிறார்கள்.

பிள்ளை எனும்
பெயரோடு
பிறந்த வீட்டில்
சிறை கிடந்தவர்கள்
மனைவி எனும்
மகுடம் மாட்டப்பட்டு
சிறை மாறுகிறார்கள்
புகுந்த வீட்டிற்கு.

பேசி முடிக்கப்பட்ட
சீதனத் தொகை
செலுத்த முடியாமல்
மாமியார் வார்த்தைகேட்டு
மரண வேதனையை
நித்தமும் சுமக்கும்
நெருப்பு வாழ்வு.

தந்தையாகும் தகுதி
கணவனுக்கு இல்லாவிடினும்
பரிசீலிக்காமலே
பலர் சொல்லிவிடுகிறார்கள்.
அவளை "மலடி" என்று.

வீட்டுவளாகம் தவிர
வெளியிடம் ஏதுமறியா
வேதனை நிலை.

அவள்
பேசாமல் இருந்தால்
வாயில புட்டா என
வசைபாடும் புகுந்த வீட்டார்
வாய்திறந்து பேசிவிட்டால்
வாய்க்காரி என்று
பட்டம் சூட்டுகிறார்.

குடும்பம் என்பது
கோயிலா?
இல்லை.....இல்லை.
இவர்களுக்கு இது
சாத்தான் வீடு. ◆

மாலை 04:20,
21-01-2010,
வ/முஸ்லிம் ம. வி.

## எனக்கு வெளிச்சம் தந்த ஆசிரிய விளக்குகள்

திரு. சோதி. சின்னத்தம்பி (அப்பப்பா) (இறப்பு)
திருமதி ஜோதிமலர்
திருமதி மங்கையற்கரசி
திரு. G. S. பரமேஸ்வரன்
திரு. அமிர்தலிங்கம்
திருமதி ஜசிந்தா இரவீந்திரன்
திருமதி இந்திராணி முரளிதரன்
செல்வி எமறஞ்சியானா
திருமதி ஈஸ்வரி
திரு. கனகரட்ணம்
திருமதி அன்பரசி
திருமதி விஜயராஜா இராஜஸ்ரீ
திருமதி கனகமணி
திருமதி கல்யாணி
திரு. இரகுபதி
திருமதி பாமினி சிவசுப்பிரமணியம்
திருமதி லதா
திரு. இருதயநாதன்
திருமதி குணலட்சுமி
திருமதி நந்தினிதேவி
திருமதி சுமதி அமலன்
திருமதி சிவயோகராணி
திரு. திருமதி முருகேசு
திரு. திருமதி சுகந்தி ரஜீவன்
திரு. விக்னேசுவரமூர்த்தி
திரு. கலாதேவன்
திரு. மேகநாதன்
திருமதி விமலராணி (இறப்பு)
திருமதி யாழ்மொழி
திருமதி பார்வதி
திருமதி வினோதினி
திருமதி இரட்ணேஸ்வரி

திரு. ஆறுமுகம் (இறப்பு)

திரு. சந்திரசேகரன்

திரு. ஆறுமுகம்

திருமதி பத்மினி

திருமதி தம்பு

திரு. குணா

திரு. நாவலன்

திரு. அதிரூபவீரசிங்கம்

திருமதி இராஜேஸ்வரி

திரு. திருமதி தவரட்ணம்

திருமதி கிருஸ்ணவேணி

திரு. சடாதரன்

திருமதி தெய்வநாயகி

திருமதி சுசிலாதேவி

திருமதி சுதா

திருமதி பாரதி

திருமதி சாரதாதேவி (இறப்பு)

திருமதி கங்காதேவி

திருமதி நிர்மலா

திரு. இராமச்சந்திரன்

திரு. இராமகிருஷ்ணன்

திருமதி வஜிதா

திரு. ஜெகன்

திருமதி உதயதேவி

திரு. கருணானந்தன்

திரு. வசீகரன்

திரு. கிருஸ்ணகுமார்

திரு. உதயசூரியன்

நெருக்கடிமிக்க சூழலில் நான் வாழ்ந்த காலத்தில் கல்வி பயில கரம் கொடுத்த திரு. சோதிராசா திரு. விக்கினராஜா, து. பரமேஸ்வரி (ரஜனி) திரு. கௌரிதாஸ் ஆகிய குடும்பத்தினரை நெஞ்சம் மறப்பதில்லை. என் கல்வியை, இலக்கியப் பணியை ஊக்குவித்த உடன் பிறப்புக்கள் ஜீவராணி, இரா. இரட்ணம், சாம்சன், நிரோசா இவர்களின் ஊக்குவிப்பு இதயம் மறவாது.

## ஒரு காலத்தின் கடிதம்...

27.12.2009,

வவுனியா.

பிரியமான 'புரட்சி' அண்ணா!

வாசகனாய் இருந்த நான் - உங்கள்

நண்பனாய் தம்பியாய் பரிணாமமாவது

வழி - இச் சிறைவாழ்க்கை உதவியது.

காலமே! [illegible]

உனக்கு கோடி நன்றிகள்!

அண்ணா!

ஆயிரம் இடர்கள் வந்தாலும்

வேதனையே இறுதிவரை தொடர்ந்தாலும்

உங்கள் 'பேனா முனை' இறுதிவரை

செய்யட்டும் நன்மைகள்...

உடலால் பிரிந்தாலும்

நினைவுகளால் இறுதிவரை உங்களோடு

இவ்வண்ணம்....

தம்பி. இராமசாமி ரமேஷ்.

27-12-09.

அக்கால நெருக்கடியான பொழுதில் எனக்கு இதனை வரைந்த முல்லை மண்ணின் படைப்பாளர் இரா. ரமேஷ் தற்போது சூரியன் பண்பலை வானொலி அறிவிப்பாளராக பணியாற்றுகின்றார்.

ISBN 955411050-2
9789554110502

Harikanan, Jaffna.

## தடைகளைக் கடந்த கவிநதி யோ. புரட்சி

கானகம் ஒன்றில்தான் முதற் கவிதையைப் படைத்தான் யோ. புரட்சி. இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய் கவிதை நூலினை வெளியிட்ட யோ.புரட்சி அந்த நூலிற்காக ‘காவிய பிரதீபா’ -விருதினைப் பெற்றுக் கொண்டவன்.


இலங்கை, முல்லைத்தீவு மாவட்டத்தில் ‘வள்ளுவர்புரம்’ எனும் அழகு நாமம் கொண்டதே இவனது ஊர். தாய் செல்லமுத்து. தந்தை யோகநாதன்.


இந்த நூலிலே அநேக கவிதைகள் இவனின் நெருக்கடி மிக்க சூழலில் எழுதப்பட்டவை. நெரு க்கடியான காலத்தில் இவனது மடியும், காட் போட் பெட்டியுமே இவனுக்கு மேசை.

வள்ளுவர்புரம் பாரதி மகாவித்தியாலய த்தில் கல்வி பயின்ற இவன், இப் பாடசாலை வரலாற்றில் முதலாவ்தாக ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தான். உலக சாதனைப் பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் யோ. புரட்சி எழுதிய பாடலைப் பாடி யிருக்கிறார்.

எங்கும், எப்போதும் கவி படைக்கும் யோ. புரட்சி இந்த நூலிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தான் கவி படைத்ததை காலம், நேரம், இடம் என்பவற்றோடு பதிவு செய்துள்ளான்.

திருமதி சாந்தி
ஜேர்மனி





நெருக்கடியான காலத்தில்
எழுத்துப் பணிக்குப்
பயன்படுத்திய காட்போட் பெட்டி